**ஜூலை – 03**

# TNPSC துளிகள்

- சௌகலில் மிகப் புதுமையான நிலையான செறிநிலை வேளாண்மையானது உணவுப் பாதுகாப்பையும் நில வளங்காப்பினையும் அதிகரித்துள்ளது என்பதை சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் (IFPRI - International Food Policy Research Institute) ஒரு புதிய ஆய்வு எடுத்துக்காட்டுகிறது.
- நீடித்த நிலைத் தன்மை, சுற்றுலா மற்றும் உள்ளூர் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தச் செய்வதற்காக பாட்னா அதன் நீர் வழி மெட்ரோ சேவையினைத் தொடங்க உள்ளது.
- காஷ்மீர்ரில் உள்ள பசந்த்கரில், இந்திய இராணுவம் மற்றும் ஜம்மு-காஷ்மீர் காவல் துறை ஆகியவை நன்கு இணைந்து மேற்கொண்ட பிஹாலி நடவடிக்கை என்ற ஒரு கூட்டு நடவடிக்கையில் ஒரு தீவிரவாதியைத் தாக்கியுள்ளன.
- அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் நிறுவனமானது, 15,539.9 மெகாவாட் செயல்பாட்டுத் திறனை எட்டியதன் மூலம் 15 GW செயல்பாட்டு திறனைத் தாண்டிய முதல் இந்தியப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனமாக மாறியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் பாபட்லா மாவட்டம், சிராலாவின் குப்படம் பட்டுப் புடவைகள் ஆனது மத்திய அரசின் "ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு" (ODOP) முன்னெடுப்பின் கீழ் தேசிய விருதை வென்றுள்ளன.
- நமது வாழ்வில் காப்பீடு வகிக்கும் முக்கியப் பங்கை மிகவும் நினைவூட்டும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 28 ஆம் தேதியன்று தேசியக் காப்பீட்டு விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
- சென்னையில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஹாக்கி இந்தியா மாஸ்டர்ஸ் கோப்பைப் போட்டியில் ஒடிசா ஹாக்கி சங்கம் (மகளிர்) மற்றும் தமிழ்நாடு ஹாக்கி பிரிவு (ஆடவர்) சாம்பியன் பட்டங்களை வென்றன.
  - இந்த அணிகளானது, முறையே ஹாக்கி பஞ்சாப் (மகளிர்) மற்றும் ஹாக்கி மகாராஷ்டிரா (ஆடவர்) அணிகள் ஆகியவற்றினை வீழ்த்தி வரலாறு படைத்தது.
- தமிழ்நாட்டில் முதல் முறையாக, சென்னைக்கு 120 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் வழங்கப் பட்டுள்ளன.
  - இந்தத் திட்டமானது, உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பெரு ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் சென்னை நகரக் கூட்டாண்மை மற்றும் நிலையான நகர்ப்புறச் சேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த ஆண்டின் தேசிய மின் பாதுகாப்பு வாரமானது ஜூன் 26 முதல் ஜூலை 02 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டது என்பதோடு மேலும் ஆண்டுதோறும் ஜூன் 26 ஆம் தேதியன்று தேசிய மின் பாதுகாப்பு தினமும் அனுசரிக்கப்படுகிறது.
  - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Smart Energy, Safe Nation" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வால்பாறை சட்டமன்றத் தொகுதி 2025

- வால்பாறை (தனி) சட்டமன்றத் தொகுதி காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- அதிமுக சட்டமன்ற உறுப்பினர் T.K. அமுல் கந்தசாமியின் மறைவைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

- இந்த அறிவிப்பை தமிழ்நாடு சட்டமன்றச் செயலகம் கடந்த வாரம் வெளியிட்டது.
- இது 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16வது தமிழ்நாடு சட்ட மன்றத்தில் காலியாக அறிவிக்கப்பட்டுள்ள ஐந்தாவது இடம் ஆகும்.
- இதற்கு குறுகிய கால அவகாசம் இருப்பதால், இடைத் தேர்தல் நடத்தப்படுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.




## Water Bell திட்டம்




- தமிழ்நாடு கல்வி அமைச்சர் பள்ளிகளில் Water Bell திட்டத்தைத் தொடங்கி வைத்து உள்ளார்.
- இது மாணவர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட இடைவெளியில் தண்ணீர் குடித்து மிக நன்கு ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டு தொடங்கப் பட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது 2025 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் தேதியன்று செயல்படுத்தப்பட்டது.
- அனைத்து அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளும் இதைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.
- ஒரு சிறப்புத் தண்ணீர் இடைவேளை மணியானது காலை 11 மணி, பிற்பகல் 1 மணி மற்றும் பிற்பகல் 3 மணிக்கு என ஒரு நாளைக்கு மூன்று முறை ஒலிக்கும்.
- இந்த மணி ஓசையானது, வழக்கமான பள்ளி இடைவேளை மணிகளிலிருந்து நன்கு

வேறுபட்டதாக இருக்கும்.

- மாணவர்கள் வகுப்பறைகளுக்குள் தண்ணீர் குடிக்க 2-3 நிமிடங்கள் வழங்கப்படும்.
- தண்ணீர் இடைவேளை நேரத்தில் வெளியே செல்லக் கூடாது.
- மாணவர்கள் தங்கள் சொந்தத் தண்ணீர் குடுவைகளைக் கொண்டு வர வேண்டும்.
- கேரள மாநில அரசானது கடந்த ஆண்டு இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தியது.

## முதல்வரின் காலை உணவு திட்டம் – 2025 மேம்பாடு

- தமிழக அரசானது, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை நகர்ப்புறங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்த உள்ளது.
- இதன் மூலம், இந்த மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளது.
- K. காமராஜின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஜூலை 15 ஆம் தேதியன்று இந்தத் திட்டத்தின் விரிவாக்கம் தொடங்கப்படும்.
- தொடக்கக் கல்வி இயக்குநரகம் ஆனது பெரும்பாலும் நகர்ப்புற உதவி பெறும் பள்ளிகளை உள்ளடக்கிய சுமார் 1,416 பள்ளிகளை இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்காகப் பட்டியலிட்டுள்ளது.
- தற்போது, 34,987 பள்ளிகளில் 17.53 லட்சம் மாணவர்கள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் அடைகிறார்கள்.
- இந்தத் திட்டமானது, 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப் பட்டது.
- 2024–25 ஆம் கல்வியாண்டில், கிராமப் புறத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இது விரிவுபடுத்தப் பட்டது.




## திருநர்கள் மற்றும் ஊடு பாலினத்தவர்களுக்கான கல்வித் திட்டங்கள்

- தமிழ்நாடு அரசானது திருநர்கள் மற்றும் ஊடு பாலினத்தவர்களை உள்ளடக்கும் வகையில் பின்வரும் இரண்டு கல்வி ஆதரவுத் திட்டங்களை அந்தப் பிரிவினருக்கு விரிவுபடுத்தியுள்ளது.
  - புதுமைப் பெண் திட்டம்

- தமிழ்ப் புதல்வன் திட்டம்

❖ இரண்டு திட்டங்களும் அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் (6 முதல் 12 ஆம் வகுப்பு) உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களுக்கு மாதத்திற்கு 1,000 ரூபாய் உதவித் தொகை வழங்குகின்றன.

❖ தற்போது, திருநர்கள் மற்றும் ஊடு பாலினத்தவர் ஆகிய இரு பிரிவினரும் அந்த இரண்டு திட்டங்களின் கீழ் பலன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.


❖ இத்திட்டங்களின் கீழ் பயன் பெற திருநர்கள் மற்றும் ஊடுபாலினத்தவர்கள் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் தமிழ் வழியில் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை என்ற தளர்வு வழங்கப்பட்டுள்ளது.

❖ அவர்கள் தமிழ்நாடு திருநர்கள் நல வாரியத்திடமிருந்து பெறப்பட்ட செல்லுபடியாகும் அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும்.

❖ உயர்கல்விக்காக மிகவும் சமமான ஒரு அணுகலை ஊக்குவிப்பதையும், விளிம்புநிலை சமூகங்களை ஆதரிப்பதையும் இந்த நடவடிக்கை நோக்கமாக உள்ளது.




## மேட்டூர் அணை நீர்மட்டம் – ஜூன் 2025




❖ மேட்டூர் அணையானது (ஸ்டான்லி நீர்த்தேக்கம்) 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்

மீண்டும் அதன் முழு மட்டமான 120 அடியை எட்டியது.

- இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் அணையானது அதன் முழு அளவை எட்டுவது இது இரண்டாவது முறையாகும்.
- மேலும், அதன் 92 ஆண்டு கால வரலாற்றில் அணை முழு கொள்ளளவை எட்டுவது இது 44 வது முறையாகும்.
- ஜூன் மாதத்தில் மேட்டூர் அணை கடைசியாக முழு அளவை எட்டியது என்பது 68 ஆண்டுகளுக்கு முன்னதாக 1957 ஆம் ஆண்டில் தான் ஆகும்.

## பண்டைய கீழடி சமூகத்தினரின் முக வடிவமைப்பு





- தென்னிந்தியாவில் மிக முதன்முறையாக, சிவகங்கை மாவட்டம் கீழடி அருகே கண்டு எடுக்கப் பட்ட சுமார் 2,500 ஆண்டுகள் பழமையான மண்டை ஓடுகளிலிருந்து அந்தப் பகுதியில் வாழ்ந்த மனிதர்களின் முகங்களை ஆராய்ச்சியாளர்கள் மீளுருவாக்கி உள்ளனர்.
- இந்த முயற்சியை மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் மற்றும் லிவர்பூல் ஜான் மூர்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவை முன்னெடுத்து மேற்கொண்டன.
- கீழடியில் இருந்து சுமார் 800 மீட்டர் தொலைவில் உள்ள கொந்தகை புதைவிடத்தில் இருந்து மண்டை ஓடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன.
- மண்டை ஓடுகளின் மேல் பகுதிகளை எண்ணிம முறையில் மீளுருவாக்குவதற்காக வரியோட்டவழிக் கணித்த குறுக்குவெட்டு வரைவு (CT ஸ்கேன்கள்) என்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டன; கிடைக்கப்பெறாத தாடை எலும்புகள் நிலையான பற்சீரமைப்பு முறைகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டன.
- அந்தச் சமூகத்தினரின் முக அம்சங்கள் தென்னிந்திய, மேற்கு யூரேசிய மற்றும் ஆஸ்ட்ரோ-ஆசிய மனிதர்களின் பண்புகளைப் பிரதிபலிக்கின்றன.
- நவீன தென்னிந்தியர்களிடமிருந்து பெறப்பட்ட திசுக்களின் தடிமன் குறித்த தரவு

ஆனது தசைகள், தோல் மற்றும் கொழுப்பு படிவு அடுக்குகளை மீளுருவாக்க உதவியது.

- தோல், முடி மற்றும் கண் வண்ணங்களை மதிப்பிடுவதற்கு ஒரு புகைப்பட தரவுத்தளம் பயன்படுத்தப்பட்டது.
- மரபணு வம்சாவளி மற்றும் புலம்பெயர்வு முறைகளைக் கண்டறிவதற்காக வேண்டி புதைவிடங்களிலிருந்து பெறப்பட்ட டிஎன்ஏ ஆனது தற்போது ஹார்வர்ட் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.
- கீழடியின் காலவரிசையானது, கி.மு. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரையிலாகும்.
- மேலும் இந்தக் காலவரிசையானது தமிழ்நாடு தொல்பொருள் துறைக்கும் இந்திய தொல் பொருள் ஆய்வுத் துறைக்கும் (ASI) இடையே விவாதத்திற்குட்பட்டதாக உள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்திய எரிசக்தி தரவுக் கோப்பு




- மின்சார அமைச்சகமானது, 2025 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று இந்திய எரிசக்தி தரவுக் கோப்பினை (IES) உருவாக்குவதற்காக வேண்டி ஒரு பணிக் குழுவைத் தொடங்கியது.
- IES என்பது எரிசக்தித் துறைக்கு ஒரு மிகப் பாதுகாப்பான, ஒருங்கிணைந்த எண்ணிம அமைப்பாக இருக்கும்.
- இது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாடு, மின் விநியோக திறன் மற்றும் நுகர்வோர் சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த அமைப்பானது நுகர்வோர், எரிசக்தி கட்டமைப்புகள் மற்றும் பல்வேறு பரிவர்த்தனைகளுக்கான ஒரு தனித்துவமான அடையாளத்தினை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இது பல்வேறு தளங்களில் நிகழ்நேர, ஒப்புதல் அடிப்படையிலான தரவுப் பகிர்வை அனுமதிக்கிறது.

- இது மும்பை, குஜராத் மற்றும் டெல்லியில் உள்ள மின் விநியோக நிறுவனங்களுடன் (DISCOM) இணைந்து 12 மாத காலத்தில் சோதனைத் திட்டமாக செயல்படுத்தப்படும்.

### GoISTats செயலி




- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSO) ஆனது 2025 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் தினத்தன்று GoISTats கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.
- இந்த செயலியானது அனைத்துக் குடிமக்களும் அதிகாரப் பூர்வ புள்ளி விவரங்களை எளிதாக அணுகவும், புரிந்து கொள்ளவும், பயன்படுத்தவும் உதவும் ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளது.
- இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, பணவீக்கம் மற்றும் வேலைவாய்ப்பு போன்றவை குறித்த சில காட்சிகளுடன் கூடிய "முக்கியப் போக்குகள்" அடங்கிய ஒரு முகப்பு பக்கத்தினைக் கொண்டு ள்ளது.
- NSO அலுவலகத்தின் அறிக்கைப் பட்டியலின் அடிப்படையில் பயனர்கள் ஒரு நிகழ்நேர அடிப்படையில் புதியத் தகவல்களைப் பெறுகிறார்கள்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### வயதாகும் தன்மையினை விரைவுபடுத்தும் அதீத வெப்பம்

- ஒரு புதிய ஆராய்ச்சியானது, தீவிர வெப்பம் என்பது உடலின் மூலக்கூறு நிலைகளில் வயதாகும் தன்மையினை எந்த வித அறிகுறியுமின்றி நன்கு விரைவுபடுத்தக் கூடும் என்பதைக் காட்டுகிறது.
- அறிவியலாளர்கள் வெப்பத்தின் தாக்கத்தினைப் புகைபிடித்தல் மற்றும் அதிக மது அருந்துதல் போன்ற முக்கிய ஆபத்து காரணிகளுடன் ஒப்பிட்டனர்.
- இந்த ஆய்வு ஆனது டிஎன்ஏவில் ஏற்படும் சில மாற்றங்களை அளவிடும் கருவிகள் "எபிஜெனெடிக் கடிகாரங்கள் எனும் வயது அளவிடல் கருவிகளை" பயன்படுத்தியது.
- இந்தக் கடிகாரங்கள் ஆனது டிஎன்ஏ மெத்திலேற்றத்தினை கண்காணிக்கின்றன.
- இது சுற்றுச்சூழலால் பாதிக்கப் படுகின்ற, மரபணுக்களை இயக்கவோ அல்லது அணைக்கவோ கூடிய ஒரு செயல்முறையாகும்.
- ஆண்டிற்கு 140க்கும் மேற்பட்ட வெப்பமான நாட்கள் (90°F அல்லது 32.3 செல்சியசுக்கு மேல்) உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களில் 14 மாதங்கள் வரை உயிரியல் ரீதியாக

கூடுதல் வயதானதாக பதிவானது.

- வாழ்க்கை முறை மற்றும் பொருளாதார வேறுபாடுகளைக் கருத்தில் கொண்ட பிறகும் இந்த வயது அதிகரிப்பு விளைவு நீடித்தது.
- விலங்குகளில் வெப்பம் ஆனது டிஎன்ஏவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதைக் காட்டுகின்றன என்பத்டு இது மிகவும் தவறான தகவமைப்பு கொண்ட எபிஜெனெடிக் நினைவகம் என்று அழைக்கப்படுகிறது.
- பருவநிலை மாற்றம் ஆனது விரைவான உயிரியல் வயது அதிகரிப்பு மூலம் எவ்வாறு நீண்டகால ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் என்பது குறித்தக் கவலைகளை இந்த கண்டுபிடிப்புகள் எழுப்புகின்றன.




## SatSure மற்றும் துருவா ஸ்பேஸ் குழு





- பெங்களூருவைச் சேர்ந்த புவிக் கண்காணிப்பு (EO) புத்தொழில் நிறுவனமான SatSure மற்றும் ஐதராபாத்தில் உள்ள துருவா ஸ்பேஸ் நிறுவனம் ஆகியவை இணைந்து புவிக் கண்காணிப்புச் சேவை (EOaaS) தீர்வுகளை வழங்குவதற்காக கூட்டு சேர்ந்துள்ளன.
- பாதுகாப்பு, வேளாண்மை, நகர்ப்புற திட்டமிடல் மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றில் வணிக பயன்பாட்டிற்கான விண்வெளி அடிப்படையிலான தீர்வுகளை அந்த நிறுவனங்கள் உருவாக்க உள்ளன.
- இதில் SatSure நிறுவனத்தின் துணை நிறுவனமான KaleidEO, EO சாதனங்கள் மற்றும் பகுப்பாய்வுத் தளங்களை வழங்கும்.
- துருவா ஸ்பேஸ் நிறுவனமானது, சிறிய செயற்கைக் கோள்கள், ஏவுதல்கள் மற்றும்

நிலக் கட்டுப்பாட்டு நிலையத்தின் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் நிபுணத்துவத்தை வழங்கும்.

- இரு நிறுவனங்களும் இணைந்து ஒன்றாக, விரைவான பணி நிறைவுக் காலக் கெடுவுடன் நம்பகமான மற்றும் விரைவான முதன்மை EO சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### தொலைதூரப் புறக்கோள் TWA 7b




- TWA 7 எனப்படும் புதிதாக உருவான ஒரு இளம் நட்சத்திரத்தினைச் சுற்றி வரும் TWA 7b என்ற புதிய புறக்கோளினை நாசா கண்டறிந்துள்ளது.
- ஒளிர்வு மிகு பொருட்களின் பொலிவினைக் குறைத்து ஒளிர்வு குறைந்த பொருட்களை படம் பிடித்தல் எனப்படும் நுட்பம் மூலம் வெப்ப சமிக்ஞைகளைப் பயன்படுத்தி இந்த கோள் ஆனது கண்டறியப்பட்டது.
- TWA 7b ஆனது புவியிலிருந்து சுமார் 111 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளது.
- இது சனியைப் போன்ற நிறை கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதோடு இது வியாழனின் நிறையி (சுமார் 100 பூமி நிறை) விட 0.3 மடங்கு அதிகமாகும்.
- இந்த புறக் கோளானது, புவியானது சூரியனிலிருந்து உள்ள தொலைவினை விட, அதன் நட்சத்திரத்திலிருந்து தோராயமாக 50 மடங்கு தொலைவில் உள்ளது.
- ஓர் இளம் மற்றும் குளிர்ந்த கோளான இதனை வழக்கமான முறைகளால் கண்டறிவது கடினமாகும்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### புதிய பிகோனியா இனங்கள்

- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பிகோனியாவின் புதிய இனமான பிகோனியா நைஷியோரம் கண்டறியப்பட்டுள்ளது.
- வனங்களின் வளங்காப்பில் அவற்றின் முக்கியப் பங்கிற்காக என்று இதற்கு நிஷி சமூகத்தின் பெயரிடப்பட்டது.
- இது தனித்துவமான சிவப்பு, சதைப்பற்றுள்ள, விளிம்பு (லேசினேட்) ஓர இலைக்காம்பு

இதழ்களைக் கொண்டுள்ளது.

❖ அதன் குழுவின் ஆசிய பிகோனியாக்களில் இதற்கு முன் கண்டிராத இந்த அம்சங்கள் உள்ளன.

❖ இந்த இனமானது அதன் மிகவும் நெருங்கிய ஒரு உயிரினமான பிகோனியா கெகர்மோனியின்ஜென்சிஸ் இனத்திலிருந்து உருவவியல் ரீதியாக வேறுபட்டது.

❖ இந்த தாவரமானது தற்போது IUCN அமைப்பின் வழிகாட்டுதல்களின் கீழ் "போதுமான தரவு இல்லாத இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★